Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2025

**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : **செல்வி.வினோதினி** |
| Father/Husband Name | : திரு, விஜயக்குமார் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது ஆயப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து ATM கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். சாட்சி கோமதி எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.**

**2) எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள இடம் சம்மந்தமாக எங்கள் வீட்டிற்கு அருகே வசிக்கும் ஆஜர் எதிரிகள் சுகுணா, பூமிநாதன் ஆகியோருடன் இடம் பிரச்னை இருந்து வந்தது. அந்த இடத்தை நாங்கள் இல்லாதபோது சர்வேயர் வந்து அளந்து குச்சி ஒன்றை நட்டுவிட்டு சென்றார்கள். பின்னர் எதிரி பூமிநாதன் அந்த குச்சியை எடுத்துவிட்டு கருங்கல் ஒன்றை எங்கள் இடத்தில் தள்ளி நட்டுவிட்டார். இது சம்மந்தமாக கடந்த 14.04.2025ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும், எனது பாட்டி கோவிந்தம்மாள், எனது அம்மா கோமதி ஆகியோர் பேசிக் கொண்டிருந்தபோது எதிர்**

வீட்டிலிருந்து ஆஜர் எதிரி சுகுணா என் பாட்டியை பார்த்து அசிங்கமாக பேசி அவரை அடிக்க வந்தார். தடுக்க வந்த என் அம்மாவை பார்த்து அசிங்கமாக பேசி கீழே இருந்த செங்கல்லை எடுத்து எனது அம்மாவின் தலையில் ஓங்கி அடித்தார். இதை பார்த்துவிட்டு எதிர் வீட்டிலிருந்து ஓடிவந்த ஆஜர் எதிரி பூமிநாதன் என் அம்மாவை கையால் அடித்தார். தடுக்க வந்த என்னையும் பார்த்து அசிங்கமாக பேசி கைகளால் என்னை அடித்தார். மேலும் இரண்டு பேரும் சேர்ந்து எங்களை கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். எங்கள் வீட்டில் அப்போது என் அப்பாவும் தம்பியும் இல்லாததால் நான் என் அப்பாவிற்கு தகவல் சொன்னேன். என் அப்பா உடனே வீட்டிற்கு வந்து என்னையும் என் அம்மாவையும் சட்ராஸ் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மேல் சிகிச்சைக்காக என் அம்மாவை செங்கல்பட்டு அரசு மருத்துவமனை அழைத்து சென்றார். என் அம்மாவிற்கு தலையில் 6 தையல் போடப்பட்டது. மேற்படி சம்பவம் தொடர்பாக நான் அன்றைய தினமே காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகா்ர ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காட்டப்படும் உடைந்த செங்கல் எதிரி சுகுணா என் அம்மாவை தாக்க பயன்படுத்தியதாகும். **(உடைந்த செங்கல் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் என் தம்பி எழுதினார். புகாரில் உள்ள விவரங்களை நான் தான் என் தம்பியிடம் சொன்னேன். எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும்

நீண்ட காலமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த சண்டை தொடர்பாக காவல் நிலையத்தில் இதற்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. புகாரில் சர்வேயர் எந்த தேதியில் வந்து நிளத்தை அளந்து குச்சி நட்டார் என்கிற விவரத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த வாகனத்தில் எனது அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்கிற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். சட்ராஸ் மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சைக்காக சென்றோம். இரவு 8.30 மணியளவில் என் அப்பா என் அம்மாவை ஆட்டோவில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். புகார் கொடுப்பதற்காக காவல் நிலையத்திற்கு நானும், எனது தம்பி, மற்றும் பக்கத்து வீட்டில் வசிக்கும் ஜெயா ஆகியோர் சென்றோம். காவல் நிலையத்தில் போலிசார் என்னை விசாரணை செய்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்திலிருந்து 2 மணி நேரம் காலதாமதமாக புகாார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என் அப்பா சாவாரி முடித்து வீட்டிற்கு வருவதற்க காலதாமதமாகிவிட்டது. புகார் கொடுக்கும் போது என் அப்பா என்னுடன் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகள் எந்த ஒரு குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் எங்களுக்கும் நீண்ட நாட்களாக இருந்த முன்விரோதம் காரணமாக நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக சொல்லி பொய்யான ஒரு புகாரை காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2025

**P.W**.2 (LW2)

Name : திருமதி.கோமதி
Father/Husband Name : திரு, விஜயக்குமார்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது ஆயப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து Post India கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். சாட்சி வினோதினி எனது மகள் ஆவார். சாட்சி விஜயக்குமார் என்னுடைய கணவர் ஆவார். சாட்சி கோவிந்தம்மாள் என்னுடைய மாமியார் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2) எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள இடம் சம்மந்தமாக எங்கள் வீட்டிற்கு அருகே வசிக்கும் ஆஜர் எதிரிகள் சுகுணா, பூமிநாதன் ஆகியோருடன் இடம் பிரச்னை இருந்து வந்தது. அந்த இடத்தை நாங்கள் இல்லாதபோது சர்வேயர் வந்து அளந்து குச்சி ஒன்றை நட்டுவிட்டு சென்றார்கள். பின்னர் எதிரி பூமிநாதன் அந்த குச்சியை எடுத்துவிட்டு கருங்கல் ஒன்றை எங்கள் இடத்தில் தள்ளி நட்டுவிட்டார். இது சம்மந்தமாக கடந்த 14.04.2025ம் தேதி மாலை 5.00 மணியளவில் என் மாமியாருடன் ஆஜர் எதிரி சுகுணா

வாக்குவாதம் செய்துக் கொண்டிருந்தார். என் மாமியாரை பார்த்து அசிங்கமாக பேசினார். சத்தம் கேட்டு நானும், என் மகளும் ஓடி வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி சுகுணா என்னை பார்த்து அசிங்கமாக பேசி கீழே இருந்த செங்கல்லை எடுத்து எனது தலையில் ஓங்கி அடித்தார். இதை பார்த்துவிட்டு எதிர் வீட்டிலிருந்து ஓடிவந்த ஆஜர் எதிரி பூமிநாதன் என்னை கையால் அடித்தார். தடுக்க வந்த என் மகளை பார்த்து அசிங்கமாக பேசி கைகளால் அடித்தார். மேலும் இரண்டு பேரும் சேர்ந்து எங்களை கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். எங்கள் வீட்டில் அப்போது என் கணவரும் என் மகனும் இல்லாததால் நான் என் கணவருக்கு என் மகள் தகவல் சொன்னார். என் கணவர் உடனே வீட்டிற்கு வந்து என்னையும் என் மகளையும் சட்ராஸ் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மேல் சிகிச்சைக்காக என்னை செங்கல்பட்டு அரசு மருத்துவமனை அழைத்து சென்றார். எனக்கு தலையில் 6 தையல் போடப்பட்டது. மருத்துவமனையில் எனக்கு 2 நாட்கள் சிகிச்சை அளித்தார்கள். என்னிடம் காட்டப்படும் உடைந்த செங்கல் எதிரி சுகுணா என்னை தாக்க பயன்படுத்தியதாகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் வேலைக்கு சென்றுவிட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்றால் வழக்கமாக 4 மணி அளவில் வீட்டிற்கு வருவேன். என்னுடன் சண்டை போட்ட ஆஜர் எதிரி சுகுணா என்னுடன் வேலை பார்ப்பவர் என்றால் இல்லை. எங்கள் நிலத்தை அளந்த நில அளவை செய்பவரை யார் அழைத்து வந்தார்கள் என்றால் ஆஜர் எதிரிகள் அழைத்து வந்தார்கள். எந்த தேதியில் நில அளவையர் வந்தார் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நில அளவையர் அளவு செய்யும் போது

நான் இருந்தேன் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் எந்த தேதியில் ஆஜர் எதிரி சுகுணா குச்சியை பிடுங்கிவிட்டு கல்லை நட்டுவிட்டார் என்கிற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. மதிய வேலையில் செய்தார்கள். ஆஜர் எதிரி சுகுணா குச்சியை பிடுங்கிவிட்டு கல்லை நட்டபோது நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட பிறகு என் கணவர் வந்து என்னை மருத்துவமனைக்கு மாலை சுமார் 5 மணி அளவில் அழைத்துச் சென்றார். சட்ராஸ் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 6 மணி முதல் 7 மணிக்குள் சென்றோம். என்னுடன் மருத்துவமனையில் என் கணவர் மட்டும் இருந்தார். சட்ராஸ் மருத்துவமனையில் இருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சென்றோம். செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு நான் செல்லும் போது இரவு 9 மணி இருக்கும். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். விசாரணை செய்யும் போது நான் மயக்கத்தில் இருந்தேன். எதிரி எந்த கையால் என்னை அடித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரி சுகுணா என்னை முழு செங்கல்லால் அடித்து அந்த செங்கல் உடைந்துவிட்டது. எதிரிகளுக்கும் எங்களுக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக அவர்களை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தில் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக சொல்லி பொய்யான ஒரு புகாரை காவல் நிலையத்தில் கொடுத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2025

**P.W**.3 (LW3)

| | |
|---|---|
| Name | : **திருமதி.கோவிந்தம்மாள்** |
| Father/Husband Name | : திரு, அப்பாதுரை |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது ஆயப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி வினோதினி எனது பேத்தி ஆவார். சாட்சி விஜயக்குமார் என்னுடைய மகன் ஆவார். சாட்சி கோமதி என்னுடைய மருமகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.**

**2) நான் எனது மகள் வீட்டிற்கு சென்றபோது எனது இடத்தில் நிலத்தை அளந்து குச்சி நட்டார்கள். நான் ஊருக்கு சென்றுவிட்டு வந்து பார்த்தபோது அந்த குச்சியை பார்த்துவிட்டு நான் ஆஜர் எதிரி சுகுணாவிடம் கேட்டேன். ஆஜர் எதிரி சுகுணா அந்த குச்சிக்கு பக்கத்தில் எங்கள் இடத்தில் காங்கிரிட் வைத்து கல் நட்டு பிரச்னை செய்தார். என்னுடன் ஆஜர் எதிரி சுகுணா வாக்குவாதம் செய்து என் முடியை பிடித்து இழுத்து அடித்தார். என்னை பார்த்து அசிங்கமாக பேசினார். சத்தம் கேட்டு என்**

மருமகளும், பேத்தியும் ஓடி வந்து பார்த்தபோது  ஆஜர் எதிரி சுகுணா என் மருமகளை பார்த்து அசிங்கமாக பேசி கீழே இருந்த செங்கல்லை எடுத்து அவரது தலையில் ஓங்கி அடித்தார். எங்கள் வீட்டில் அப்போது என் மகனும், என் பேரனும் இல்லாததால் என் பேத்தி என் மகனுக்கு தகவல் சொன்னார்.  என் மகன் உடனே வீட்டிற்கு வந்து என் மருமகளை சட்ராஸ் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மேல் சிகிச்சைக்காக என் மருமகளை செங்கல்பட்டு அரசு மருத்துவமனை அழைத்து சென்றார். என் மருமகளுக்கு தலையில் 16 தையல் போடப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான்.  இட பிரச்னை சம்மந்தமாக எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றால் சரிதான்.  அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.  சர்வேயர் வந்து நிலத்தை அளந்தபோது நான் இல்லை என்றால் சரிதான்.  போலிஸ் விசாரணையில் ஆஜர் எதிரி என்னை அடித்தது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான்.  இடத்தை அளந்தது சம்மந்தமாக என் மருமகளிடம் என் வீட்டிற்கு வெளியே  நான் பேசிக் கொண்டிருந்த போது ஆஜர் எதிரி என்னை தாக்க முற்பட்டார் என்றால் சரிதான்.  இந்த சம்பவம் தொடர்பாக எனது பேத்தி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும்.  முதல் விசாரணையில் என் மருமகளுக்கு தலையில் 16 தையல் போடப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.  போலிஸ் விசாரணையில் என் மருமகளுக்கு போடப்பட்ட தையல் குறித்து நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.  இந்த சம்பவம் தொடர்பாக  ஒரு வாரம்

கழித்து காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஆஜர் எதிரிகள் மீது இருந்த முன்விரோதம் காரணமாக அவர்கள் மீது பொய்யாக ஒரு புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஏற்ப பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2025

**P.W**.4 (LW4)

| | |
|---|---|
| Name | : **திரு.விஜயக்குமார்** |
| Father/Husband Name | : திரு, அப்பாதுரை |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது ஆயப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். சாட்சி கோமதி எனது மனைவி ஆவார். சாட்சி வினோதினி என்னுடைய மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.**

**2) எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள இடம் சம்மந்தமாக எங்கள் வீட்டிற்கு அருகே வசிக்கும் ஆஜர் எதிரிகள் சுகுணா, பூமிநாதன் ஆகியோருடன் இடம் பிரச்னை இருந்து வந்தது. அந்த இடத்தை நாங்கள் இல்லாதபோது சர்வேயர் வந்து அளந்து குச்சி ஒன்றை நட்டுவிட்டு சென்றார்கள். பின்னர் எதிரி பூமிநாதன் அந்த குச்சியை எடுத்துவிட்டு கருங்கல் ஒன்றை எங்கள் இடத்தில் தள்ளி நட்டுவிட்டார். இது சம்மந்தமாக ஒரு வருடத்திற்கு முன்பு எனது மனைவியும் எனது அம்மாவும் பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகளுக்கும் அவர்களுக்கும் பிரச்னை ஏற்பட்டது. அப்போது என்**

மகளையும் என் மனைவியும் என் அம்மாவும் ஆஜர் எதிரிகள் தாக்கினார்கள். என் மனைவியை செங்கல்லை கொண்டு தலையில் அடித்தார்கள். என் மனைவிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் உடனே வந்து பார்த்து என் மனைவி மற்றும் மகளை சட்ராஸ் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்து சிகிச்சைக்காக சட்ராஸ் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கிருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு என் மனைவியை அழைத்துச் சென்றேன். என் மனைவிக்கு தலையில் 9 தையல் போட்டார்கள். 3 நாட்கள் வரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

சம்பவம் தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் கேள்விப்பட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.